**DEPOSITION OF WITNESS**
(Chapter XXII Code of Criminal Procedure)
**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS COURT, ARIYALUR.**

| | |
|---|---|
| Case No: | **SPL.CC.No.26/2025** |
| Prosecution Witness : | **LW - 7 / PW - 6** |
| Name : வீரமுத்து | Taluk : |
| S/o. : | Age : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the Day **20.04.2026**

(எதிரிகள் ஆஜர்)

**முதல் விசாரணை**

நான் தற்போதும் சம்பவத்தின் போதும், அரியலூர் மாவட்டம் சுத்தமல்லி மின்வாரிய அலுவலகத்தில் மின்பார்வையாளராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். என்னுடைய அலுவலக பணி என்ன என்றால் முதல் பணி காலை 06.00 மணியிலிருந்து பகல் 12.00 மணி வரை, இரண்டாவது பணி பகல் 12.00 மணி முதல் இரவு 08.00 வரையிலும், மூன்றாவது பணி இரவு 08.00 மணி முதல் மறுநாள் காலை 06.00 மணி வரை ஆகும். கடந்த 08.02.2020 அன்று என்னுடைய பணி பகல் 12.00 மணி முதல் இரவு 08.00 மணி வரையிலானது ஆகும். அந்த நேரத்தில் மின்அளவியல் எடுத்து பதிவு புத்தகத்தில் பதிவு செய்வது எனது பணியாகும். அன்று மாலை சுமார் 05.00 மணியளவில் மின் அளவைகள் எடுத்து எனது அலுவலகத்தில் இருந்தபோது பக்கத்தில் இருந்த அலுவலகத்தில் 4, 5 நபர்கள் உள்ளே சென்றார்கள். அதில் ஒரு நபர் எனது அலுவலகத்திற்குள் வந்து விவசாயி தர்மலிங்கம் என்பவரிடம் போர்மேன் சரவணன் 10,000 ரூபாய் இலஞ்சம் வாங்கியிதற்காக கைது செய்யப்பட்டிருக்கிறார் என்று சொன்னார். அப்படியாக தான் நான் அந்த தகவலை தெரிந்து கொண்டேன். அது குறித்து போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று சொல்லப்பட்டது.**

**<u>2ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

**01.02.2020 க்கு முன்பு நான் எங்கு பணியில் இருந்தேன் என்றால் அதே அலுவலகத்தில் தான் பணியில் இருந்தேன். நான் 2015 லிருந்து அந்த அலுவலகத்தில் தான் பணிபுரிகிறேன். போர்மென் சரவணன் அலுவலக அறைக்கும், என் அலுவலக அறைக்கும் போய் வருவதற்கு ஒரே வராண்டா தான் உள்ளது என்றால் சரிதான். நான் அன்று மாலை 05.00 மணி அளவில் மின் அளவை எடுத்து கொண்டிருந்தபோது, போர்மென் சரவணனை 4, 5 நபர்கள் தரதரவென வெளியே இருந்து உள்ளே இழுத்து கொண்டு போனார்களா என்றால் ஆமாம் அவ்வாறு தான் இழுத்து கொண்டு போனார்கள்.**

**<u>மறு விசாரணை–</u>**இல்லை.

(ஒம்) – திருமதி.T.மலர்வாலண்டினா,
முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
அரியலூர்.